# இரட்டைக் காப்பியங்களில் தாய்த் தெய்வ வழிபாடு

முனைவர் தெ.கீதா
உதவிப் பேராசிரியர்,தமிழ்த்துறை (சுயநிதி பிரிவு ),
வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு-12

17

**ஆய்வுச் சுருக்கம்**

மனித சமுதாயத்தில் ஒரு தலைமுறை பெற்ற தகவல் அடுத்த தலைமுறைக்கு மொழியின் துணைகொண்டு பரிமாறப்படுகிறது. தாய்வழிச் சமூகத்திற்கான சான்றுகளைப் பெற்றுள்ள மனித இனத்தின் இனப்பெருக்கக் கூறுகளைக் கொண்டவள் தாய் என்பதை அறிந்து தாயை முதல் தெய்வமாகக் கொண்டு தாய்த் தெய்வ வழிபாட்டினை மேற்கொண்டனர். இறைவனைத் தந்தையாக, தலைவனாக ,தோழனாக, தனயனாக என்று பல வழிகளில் மக்கள் பக்தியுடன் அன்பு பாராட்டினாலும் இவற்றில் தலை சிறந்த அன்பு முறை தாய் - பிள்ளை உறவாகும். எனவே தான் இறைவனைத் தாயாகக் காணும் வழிபாடு சிறப்பு பெற்று விளங்குகிறது. பிள்ளையானவன் நன்மை செய்தாலும் தீமை செய்தாலும் மாறாத தாய் அன்புக்கு ஒப்பானது தெய்வத்தின் அன்பாகும். இம்மாபெரும் தாய்த் தெய்வ சக்தியை மக்கள் பல உருவங்களில் வழிபட்டு வருகின்றனர். அத்தகைய தாய்த் தெய்வங்களையும் அவற்றின் அளப்பரிய ஆற்றல்களையும் பல்வேறு காலகட்டங்களில் தோன்றிய இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. அவ்வகையில் இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலையில் இடம்பெறும் தாய்த் தெய்வ வழிபாட்டுக்குக் கூறுகள் இவ்வாய்வில் இடம்பெறுகிறது.

**திறவுச்சொற்கள்** - இரட்டைக் காப்பியங்கள் – சிலப்பதிகாரம் – மணிமேகலை- தாய்த் தெய்வ வழிபாடு – கொற்றவை – சாலினி – குருதி –ஆபுத்திரன் – உதயகுமாரன் – அம்பலம்

**முன்னுரை**

தாய்த் தெய்வ வழிபாடானது தொன்று தொட்டு வழிபடப்படும் மிகப் பழமையான வழிபாட்டு முறையாகும். பெண்ணை முன்னிலைப்படுத்தி வழிபடப்படும் இவ்வழிபாட்டு முறை காலந்தோறும் நிகழ்கின்றமையை பல்வேறு காலத்தில் தோன்றிய இலக்கணங்கள், இலக்கியங்கள், காப்பியங்கள் வாயிலாக அறியமுடிகின்றது. அவ்வகையில் இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலையில் இடம்பெறும் தாய்த் தெய்வ வழிபாடு குறித்து இக்கட்டுரை வெளிப்படுத்துவதாக அமைகிறது,

**தாய்த் தெய்வம்**

புதியதொரு மனிதப் பிறவியை உலகிற்குத் தருபவளாகக் காணப்பட்டதாலும், அசாதாரண சக்தி படைத்தவளாக இருந்தமையாலும், பெண்ணிடமே மந்திர சக்தி இயல்பாகக் குடிகொண்டது. சக்தி வழிபாடு அல்லது பேரன்னை வழிபாடு உலகெங்கும் ஒரு காலத்தில் தோன்றியதன் காரணமாகவே பெண்கள் மந்திர சக்தி படைத்தவர்களாயினர். உயிர் போற்றும் புராதன மந்திரச் சடங்குகளில்

இருந்தே பெண்களுடன் நெருங்கிய தொடர்புள்ள நம்பிக்கை, அன்னை வழிபாடாகப் பரிணமித்தது எனலாம். பின்னர் பிறப்புடன் மட்டுமில்லாமல் இறப்புடனும் அன்னை வழிபாடு தொடர்பு பெற்றது. மனித உயிரை மட்டுமின்றி காலப் போக்கில் மனிதனுக்குத் தேவையான விலங்குகளையும் அவற்றின் வளத்தைப் பெருக்கவும் அன்னை வழிபாட்டு முறை பயன்பட்டதை அறியமுடிகின்றது.

**"சிற்றிடைக் கொல்கி நுடங்குந் திருவயிற்ற ளொருத்தி**
**பெற்றெடுக்குந் திறற் பிள்ளைகள் மூவரும் மூவரையும்**
**கற்றிடச் சொன்ன தொழிலொரு மூன்றவரிற் கடைகாற்**
**செற்றிடச் சொன்ன பிள்ளைக் கவளே யம்மை தேவியுமே"[1]**

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று தொழில்களைச் செய்ய வேண்டிய மூன்று தலையாய கடவுளர்களைப் பெற்றெடுத்தவளே சக்திதான் என்று மேற்கண்ட பழம் பாடல் கூறுகின்றது.

**சிலப்பதிகாரத்தில் தாய்த்தெய்வ வழிபாடு**

சங்க காலத்திற்கும் பக்தி இலக்கிய காலத்திற்கும் இடையே ஏற்பட்ட தாய்த் தெய்வமான கொற்றவை வழிபாட்டின் தொடர்ச்சியை பாலம் போன்று நின்று சிலப்பதிகாரம் உணர்த்துவதை அறிய முடிகின்றது.

**கொற்றவை கோயில்**

வேட்டுவ வரி ஐயைக் கோட்டமாம் கொற்றவை கோயிலின் பலி கொள்ளும் முன்றிலில் எல்லாவிடத்தும் மணம் வீசும் சுர புன்னையும், நாரத்தையும் நிரல்பட உள்ளன. செம்மரமும் மாமரமும் செறிந்து நிற்கின்றன. வேங்கை மரங்கள் சிவந்த பொன் போன்ற பூக்களையும் புன்னை மரங்கள் பழம் பூக்களாகிய வெள்ளிய பொறியையும் சிந்த நல்ல இலவ மரங்கள் தம் கொம்புகளில் உள்ள செவ்விதழைப் பூத்துச் சொரிந்து குவித்தன. வெண்கடம்பும், பாதிரியும் புன்னையும் குறையும் கோங்குமாகிய மலர்கள் மலர்ந்து நிற்க அவற்றின் கொம்புகளில் வண்டினம் தேனினத்தோடு யாழினத்து அரவம் போலப் பாடி நிற்கின்றன என்பதை,

**"ஆறுசெல் திருகலின் நடுங்கு அகர் எய்தி**
**நறும்பல் குரும்பல உயிர்த்தாங்கு**
**ஐயை கோட்டத்து எய்யா ஒரு சிறை[2]**

என்ற பாடல் விளக்குகிறது .

**வேடர்கள் வழிபாடு**

வேடர்கள் கொற்றவையின் முன்னின்று பின்வரும் பாடல்களைப் பாடி வழிபட்டனர்.

**"ஆனைத்தோல் போர்த்து புலியி னுரியுடுத்து**
**காந்த தெருமைக் கருந்தலைமே நின்றயால்**
**வானோர் வணங்க மறைமேன் மறையாகிய**
**ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யேநிற்பாய் "[3]**

என்பதை அறிய முடிகிறது.

**கோவலன், பாணர் வழிபாடு**

கோவலனும் பாணரும் யாழ் கொண்டு கொற்றவையின் பாடலாகிய பண்ணைப் பாடினர் என்பதை புறஞ்சேரி இருந்த காதையில்,

**“பாய்களைப் பாவை பாடல்பாணி**
**ஆசான் திறத்தின் அமைவரைக் கேட்டு**[4]

என்ற வரிகளின் மூலம் அறியமுடிகிறது.

**சிலம்பில் கண்ணகி வழிபாடு**

கோவலன் வெட்டுண்டு விழுந்த காலம் தொடங்கி, பாண்டிய நாட்டில் மழை இல்லாது போயிற்று. அதனால் வறுமையும் நோயும் அதிகரித்தன. அது தெரிந்து கொற்கை நகரத்து இருந்த அரசனாகிய இளஞ்செழியன் பத்தினிக் கடவுளுக்கு ஆயிரம் பொற்கொல்லரைப் பலியிட்டு கள வேள்வியால் சாந்தி செய்து விழா எடுத்ததால் அந்த நாட்டில் மழை மிகவும் பெய்தது. முற்கூறிய வறுமையும் நோயும் நீங்கின. அதனைக் கேள்வியுற்று கொங்கு மண்டலத்தரசரும், இலங்காபுரத்து அரசனாகிய கயவாகுவும், கண்ணகிக்குக் கோயில் கட்டி நித்தியா பூசை,விழா முதலியவற்றைச் செய்து வழிபட அவர்களின் நாடுகள் மிகுந்த வளமுற்றன என்று சிலப்பதிகாரம் எடுத்தியம்புகிறது. மதுரை தீயுண்டது. கண்ணகி மறைவிற்குப் பிறகு வழிபடு தெய்வமானாள். பார் தொழுது ஏத்தும் பத்தினியாதலின் பத்தினிக் கடவுளாகவும் கண்ணகியை மன்னர்களும் மக்களும் வழிபடத் தொடங்கினர் என்று சிலம்பு கூறுகிறது.

**கண்ணகியும் கொற்றவையும்**

கண்ணகியைக் கொற்றவையின் கூறாகவே பல்வேறு இடங்களில் படைத்துக் காட்டுகின்றார் இளங்கோவடிகள். வேட்டுவ வரியில் சாலினி கண்ணகியைத் தெய்வமாகவே கூறுவதால் 'கண்ணகி துர்க்கையாகவே பிறந்தாள்' என்று அரும்பத உரையாசிரியர் கூறுகின்றார் என்பதை,

**"இவளோ கொங்கச் செல்வி குடமலையாட்டி**
**செந்தமிழ்ப் பாவை செய்தவள் கொழுந்து**
**ஒரு மணியாய் உலகிற்கு ஓங்கிய**
**திருமா மணிஎனத் தெய்வமுற்று உரைப்ப”**[5]

என்ற வரிகளின் மூலம் அறியமுடிகின்றது.

கொற்றவைக்கு எயினர் குருதி பலி கொடுத்தது போலவே கொற்றவையின் கூறாகக் கருதப்பட்ட கண்ணகிக்கும் பொற்கொல்லன் ஆயிரவரைப் பலி கொடுக்கின்றான் வெற்றிவேற் செழியன் என்பதை,

**“மட்டும் வாழ்க்கை வேண்டுதி ராயின்**
**கட்டுண் மாக்கள் கடந்தரும் எனவாங்கு**
**இட்டுத் தலையெண்ணும் எயினர் அல்லது "**[6]

என்ற பாடல் வழி அறியமுடிகின்றது.

இமய மலையிலிருந்து கல் எடுத்து கண்ணகிக்குப் படிமம் செய்கின்றான் சேரன் செங்குட்டுவன். எனவே அவளும் உருவக நிலையில் இமய அரசன் மகளாகிய உமையோடு சமமாகக் கருதப்படுகிறாள். 'இமய மலையில் பிறந்து' என்று தேவந்தி கூறுவதும்,

**“ மலைஅரையன் பெற்ற மடப் பாவை “**[7]

என்று உண்மை போன்று கண்ணகி பாடப்படுகின்றாள் என்பதையும் அறியமுடிகின்றது. திருமகளும் கலைமகளும் கொற்றவையுமாகிய மூவரும் படைத்த வெற்றியினை ஒருங்கே உடையவளாகக் கண்ணகி அழற்படுகாதை இறுதி வெண்பாவில் சிறப்பித்துக் கூறப்படுகின்றாள்.

**மணிமேகலையில் தாய்த் தெய்வ வழிபாடு**

மறையவர்கள் வாழ்கின்ற ஊர்களில் எல்லாம் பசுவைக் கவர்ந்த திருடன் என்று ஆபுத்திரனது பிச்சைப் பாத்திரத்தில் கற்களை இட, பெருஞ்செல்வத்தால் விளக்கமுற்றோர் வாழ்கின்ற தெற்கின் கண் சென்றடைந்து கலைமகள் கோயிலில் தங்கினான், அக்கோயிலை,

**"சிந்தா விளக்கின் செழுங்கலை நியமத்து**
**அந்தில் முன்றில் அம்பலப் பீடிகை "**[8]

என்று சித்தலைச் சாத்தனார் வருணிக்கிறார். இங்கு பலிபீடத்தோடு கூடிய அம்பலம் கூறப்படுகிறது. தாய்த் தெய்வத்தின் கூறாகிய கலைமகள் உறையும் கோயிலாதலால் அது காலை நியமம் எனக் கூறப்பட்டிருக்கலாம்.

**"சிந்தா விளக்கின் செழுங்கலை நியமத்து**
**நந்தா விளக்கே நாமிசைப் பாவாய் "**[9]

என்றவாறாக ஆபுத்திரன் தேவியை வணங்கிய நிலையைக் குறிப்பிட்டுள்ளார் மணிமேகலை ஆசிரியர்

**"நாற்பெருவாயிலும் பாற்பட்டோங்கிய**
**காப்புடையிஞ்சிக் கமுது வழங்காரிடை**
**யூலையா உள்ளமொடு யிர்க்கட நிறுத்தோர்**
**தலை தூங்கு நெடுமரந் தாழ்ந்து புறஞ்சுற்றிய**
**பீடிகை யோங்கிய பெரும்பலி முன்றிற்**
**காடமார் செல்வி காலிப்பெருங் கோட்டமும்”**[10]

தாய்த் தெய்வக் கூறாகிய காளிக்குச் சக்கரவாளக் கோட்டத்தில் இருந்த கோயில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. நரபலி இடும் பீடிகையும், பலி கடனாக அறுத்து தலைகள் தொங்கும் நெடுமரமும் மணிமேகலையில் வருணிக்கப்பட்டுள்ளது.

**மணிமேகலையும் தாய்த் தெய்வமான கொற்றவை வழிபாடும்**

உதயகுமரன் மனம் மாறுதலடைந்து விரைந்த செலவினையுடைய குதிரைகள் பூட்டப் பெற்ற பெரிய தேரின் மீது ஏறிச் சென்று அமுதசுரபி ஏந்திய மணிமேகலையைக் கண்ட நிலையை உதயகுமரன் அம்பலம் புக்க காதையில் கூறுகின்ற பொழுது ஆசிரியர் மணிமேகலையையும், கொற்றவையையும் ஒப்பிட்டுக் கூறுவதை,

**“காடமர் செல்வி கடிப்பசி களைய**
**ஓடுகைக் கொண்டு நின்றுட்டுநல் போலத்**
**தீய்ப்பசி மக்காட்கு செழுஞ்சோ றீத்துப்**
**பாத்திரம் ஏந்திய பாவாயைக் கண்டாலும்**[11] என்ற வரிகளின் மூலம் உணர முடிகின்றது. ஆசிரியர் கொற்றவையினை மணிமேகலைக்கு ஒப்பிட்டுக் கூறுவதன் மூலம் மணிமேகலை தெய்வத்தன்மை உடைய பாத்திரமாக உணர முடிகின்றது.

**முடிவுரை**

சிலப்பதிகாரத்தில் கொற்றவை தெய்வம் வழிபடப்பட்டதையும் மணிமேகலையில் கலைமகள், காளி போன்ற தெய்வங்கள் வழிபடப்பட்டதையும் அறியமுடிகின்றது. அதோடு மட்டுமில்லாமல் கண்ணகியும் மணிமேகலையும் தெய்வத் தன்மை நிறைந்த பாத்திரங்களாகவே படைக்கப்பட்டுள்ளனர். இருவருமே தாய்த் தெய்வமான கொற்றவையுடன் ஒப்புமைபடுத்தப் படுகின்றனர் என்பதை அறிய முடிகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1.கிளமெண்ட் ஈஸ்வர், புதுவை மாநில பெண் தெய்வங்களும் தெய்வீகப் பெண்களும்,ப.எண்.21
2. சிலப்பதிகாரம்,காதை12,பா.எண்12, வ.2-4
3. மேலது., பா.எண்.8
4. மேலது., காதை13, பா.எண்.111
5. மேலது., காதை12, வ.47-50
6 மேலது., வ.18-20
7. மேலது., காதை30, வ.1
8. மணிமேகலை,காதை13, வ.106-107
9. மணிமேகலை,காதை14, வ.17-18
10.மேலது., காதை 6, வ.48-53
11. மேலது., காதை18, வ.115-118

**துணைநூற் பட்டியல்**

இளங்கோவடிகள்., சிலப்பதிகாரம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்குழு திருநெல்வேலி,1968

சோமசுந்தரனார். பொ.வே மணிமேகலை,கழக வெளியீடு, சென்னை,1975

இரவி கார்த்திகேயன்.ஆ தமிழ்ச் சமூகமும் தெய்வங்களும், சரவணபாலு பதிப்பகம், விழுப்புரம்-2 ,1995

காவ்யா சண்முகசுந்தரம் திராவிடத் தெய்வம் கண்ணகி, காவ்யா பதிப்பகம், சென்னை-24 2011